DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 248/2018 |
| Deposition of Witness for | Prosecution PW 1 |
| Name | பில்லப்பன் |
| Father / Husband Name | சேது |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 28th August 2024.

---

(எதிரி ஆஜர்).

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

1) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். அதிலுள்ள முழு விவரங்கள் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர் எனக்கு நண்பர். எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் சுமார் 10 – 12 வருடங்களாகத் தெரியும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகேிறன்.

2) பகுதி நேரமாக வேறு எதுவும் தொழில் செய்து வருகிறேனா என்றால் சொந்தமாக எலுமிச்சை மரம், தென்னை மரம் உள்ளது அதில் கிடைக்கும் பொருள்களை சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்வேன். அதில் மாதவருமானம் ஆண்டு வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்றால் மாதம் சுமார் 50 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். எதிரிக்கு நான்

எவ்வளவு தொகை கொடுத்துள்ளேன் என்றால் 1 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய். எந்த தேதியில் பணம் கொடுத்துள்ளேன் என்றால் 18.01.2018 ம் தேதி.

3) எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் ஒக்கூரில் உள்ள அவரது கடையில் வைத்து பணம் கொடுத்தேன். யார் முன்னிலையில் பணம் கொடுத்தேன் என்றால் நான் பணம் கொடுக்கும்போது அங்கு வேறு யாரும் இல்லை. இது போல் எதிரிக்கு இதற்கு முன்னால் பணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு எவ்வளவு வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் இரண்டு வட்டிக்கு எதிரி வட்டித் தொகையை மாதம் மாதம் செலுத்துவாறா என்றால் 18.01.2018 ம் தேதியன்று கடன் வாங்கும் போது 2 மாதத்திற்கான வட்டிப் பணத்தைச் சேர்த்துக் கொடுத்தார். அதன் பின்னிட்டு வட்டிப் பணம் கொடுக்கவே இல்லை.

4) 2 மாதத்திற்கான வட்டிப் பணமாக எவ்வளவு தொகை கொடுத்தார் என்றால் 6,800 ரூபாய் கொடுத்தார். எதிரி கேட்டவுடன் பணம் கொடுத்தேனா என்றால் அவர் கேட்டு 3 நாள்கள் கழித்து தான் கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது எதிரியிடம் காசோலையை வாங்கிக் கொண்டேனா என்றால் ஆமாம். பணத்தைக் கொடுத்தவுடன் தான் காசோலையைக் கொடுத்தார். எதிரியிடம் கடனுக்கு ஆதரவாக எத்தனை காசோலைகள் வாங்கினேன் என்றால் ஒரு காசோலை மட்டும் வாங்கினேன். மேற்கண்ட தொகைக்கு ஆதரவாக எதிரியிடமிருந்து வேறு எந்த ஆவணமும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

5) எதிரியிடம் நான் பணத்தைக் கொடுக்கும்போது எதிரியின் நண்பர் ஜோசப் த/பெ மாணிக்கம் ஊர் பாகனேரி என்பவர் முன்னிலையில் வைத்து தான் எதிரிக்கு எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன் என்றாலும் அதுவும் 1 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தேன் என்றாலும் அதற்கு எட்டு வட்டி கணக்கிட்டு கொடுத்தேன் என்றாலும் அதற்கு ஆதரவாக காசோலையுடன் சேர்த்து ஒரு புரோ நோட்டு ஒன்றையும் ஜோசப் அவர்கள் சாட்சி கையொப்பமிட்டு அவர் கைப்படவே நிரப்பி அதன் அசலினை என்னிடம் ஒப்படைத்தார் என்றாலும் அதன் நகல் மட்டுமே எதிரி வசம் உள்ளது என்றாலும் சரியல்ல.

6) மேற்படி காசோலையில் எதிரி கையொப்பம் மட்டும் இட்டார். தேதி மற்றும் தொகையை எனக்கு தகுந்தாற் போல் நிரப்பிக் கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குத் தவிர காசோலைகள் வழக்குகள் எனது பெயரில் இந்நீதிமன்றத்தில் எத்தனை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 6 வழக்குகள். கடந்த 2009 ம் ஆண்டு முதல் 2024 வரை இந்த வழக்குகளுடன் சேர்த்து 27 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) மேற்படி இந்நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகள் நான் வட்டிக் பணம் கொடுத்து அதைத் திரும்பப்

பெறமுடியாததால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சில நபர்களுக்கு வட்டிக் பணம் கொடுத்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சில நபர்களுக்க வட்டிக் அல்லாமல் கடன் கொடுத்தது தொடர்பாகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வட்டிக் கடன் கொடுத்த நபர்களிடம் காசோலையுடன் சேர்த்து புரோ நோட்டும் வாங்கும் பழக்கம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.

8) மேற்படி இந்நீதிமன்றத்தில் CC 143/2021 என்ற வழக்கில் மாரிமுத்து என்பவருக்கு எதிராக நான் தாக்கல் செய்த வழக்கில் கடந்த 08.12.2022 ம் ஆண்டு தாங்கள் மாரிமுத்து என்பவரிடம் கடனுக்காக புரோ நோட்டு வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. எந்த தேதியில் எந்த வங்கியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. 23.03.2018 ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்தேன் கடந்த 10.04.2018 ம் தேதி மேற்படி காசோலைத் தொடர்பாக எதிரியைத் தொடர்பு கொள்ளச் சொல்லி வங்கியிலிருந்து கூறினார்கள். கடந்த 12.04.2018 ம் தேதி எதிரியை நேரில் சந்தித்து கேட்டேன். அப்போது எதிரி இன்னும் 10 நாள்களில் பணத்தை அவரது வங்கிக் கணக்கில் போடுவதாகவும் அதன் பின் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யுமாறும் கூறினார்.

9) அதன் பின் 25.04.2018 ம் தேதி ஒக்கூர் இந்தியன் வங்கியல் மேற்படி காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தேன். 25.04.2018 ம் தேதி மாலையே வங்கியிலிருந்து என்னைத் தொடர்பு கொண்டு காசோலை போதிய பணம் இல்லாத காரணத்தால் திருப்பப்படுவதாக கூறினார்கள். எனக்கு மொத்தம் எத்தனை வங்கிக் கணக்கு உள்ளது என்றால் 4 வங்கிக் கணக்கு உள்ளது. காசோலையை ஏன் பாண்டியன் வங்கியில் தாக்கல் செய்யாமல் இந்தியன் வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் எதிரி கூறியதால் தான் ஒக்கூர் வங்கியிலேயே தாக்கல் செய்தேன்.

10) வழக்கறிஞர் மூலமாக எந்த தேதியில் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் 24.05.2018 ம் தேதி, எதிரி அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் ஆமாம். பொய்யான சங்கதிகளைக் கண்டு பதில் அறிவிப்பு அனுப்பினார். எதிரி என் மீது மதகுப்பட்டி காவல் நிலையத்தில் கந்துவட்டி புகாரை என் பெயரில் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. அந்த புகாருக்கு ஜோசப், முரளி, சுப்பிரமணியன், நத்தம்பட்டி பஞ்சாயத்து தலைவர், கோட்டைச்சாமி ஆகிய முக்கியஸ்தர்களை வைத்து பஞ்சாயத்து பேசினேனா என்றால் இல்லை.

11) எதிரி என்னிடம் 1 லட்சம் ரூபாய் பணத்தை வட்டியுடன் சேர்த்து பல தவணைகளில் 1 லட்சத்தி 60 ஆயிரம் ரூபாயை கட்டி முடித்துவிட்டார் என்றாலும் சரியல்ல.

அதற்கு ஆதரவாக கொடுத்த காசோலையை எதிரி அவரது நண்பர் ஜோசப் கேட்கச் சென்ற போது காசோலையை திரும்ப கொடுக்காமல் அவர் மீது இந்த காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும் தாங்கள் வட்டிக்கு பணம் கொடுப்பதை முக்கிய தொழிலாக நடத்தி வருவதாகவும். பணம் செலுத்தி முடித்துவிட்டு காசோலையை திருப்பி கேட்கும்போது காசோலையை ஆதரவாக பயன்படுத்திக் கொண்டு அவர்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்வதை வழக்கமாக வைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு எந்த கடன் தொகையும் செலுத்த வேண்டியதில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J ANITHA CHRISTY

Digitally signed by J ANITHACHRISTY
Date: 2024.09.06 15:32:14 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.